# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

Calendar
Miscellaneous
Preliminary Register
**Sessions**

**Spl.Sessions Case No. : 15/2020**

**Deposition of witness for**

| | | |
|---|---|---|
| **Prosecution** | : | **P.W. : 6** |
| Defence | : | D.W. : |
| Court | : | C.W. : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார்_ | வயது | : | |
| த/பெ. (அ) | : | | தொழில் | : | |
| க/பெ. | | | | | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 02.12.2020**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பெரம்பலூரில் வசித்து வருகிறேன். 26.10.2019 ம் தேதி மதியம் 2.00 மணி அளவில் என் வீட்டிற்கு அருகில் உள்ள பெட்டிகடையில் நின்றுக்கொண்டிருந்தபோது போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர், மாதிரி வரைபடம் சம்பவ இடத்தை பார்த்து தயார் செய்தார்கள். பார்வை மகசரில் நானும், செல்வராஜ் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது ஆகும். அது அ.த.சா.ஆ. 4 ஆகும். என்னை போலீஸார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | } | **Spl.Sessions Case No. : 15/2020** |

| | | | | |
|---|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | **:** | **P.W. :** | **7** |
| | Defence | : | D.W. : | |
| | Court | : | C.W. : | |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ராமமூர்த்தி | வயது | : | |
| த/பெ. (அ) | : | தொழில் | : | |
| க/பெ. | | | | |
| ஊர் | : | சமயம் | : | |
| வட்டம் | : | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 02.12.2020**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் சின்னவடலாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். குமாருக்காக நாங்கள் பழனியம்மாளுக்கு ரூ. 45,000/- கட்டினோம். குமார் குழந்தைகளை வீட்டிற்கு அழைத்து சென்றோம். இரவு காரிலியே வேலைக்கு சென்றுவிட்டார்கள். போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் தொழுதூரை சேர்ந்த முருகேசன் என்பவருக்கு 1 வருடத்திற்கு ஆடு

மேய்ப்பதற்காக குரும்பலூரை சேர்ந்த சங்கர் அவர் மனைவி பழனியம்மாளிடமிருந்து ரூ. 80,000/- குமார் ஒரு மாதத்திற்கு வாங்கினார் என்றும், குமார் தொழுதூர் போய் 2 வாரம் ஆடு மேய்த்துவிட்டு ஆடு மேய்க்கும் வேலை தெரியாததால் வேலையை விட்டுவிட்டு அவருடைய மாமியார் வீடான நரசிங்கபாளையத்திற்கு சென்றுவிட்டார் என்றும், பழனியம்மாள நரசிங்கபாளையம் போய் குமாரிடம் உடனே பணம் வேண்டும் என்று கேட்டதற்கு தற்போது பணம் இல்லை என்று சொன்னதை கேட்காமல் குமாரின் 3 பிள்ளைகளையும் வலுகட்டாயமாக காரில் கடத்திக்கொண்டு குரும்பலூருக்கு சென்றுவிட்டார் என்றும், குமார் பணம் வாங்கிகொண்டு பழனியம்மாளிடம் தகவல் சொல்லி மங்களமேடு வந்து பணம் கொடுத்துவிட்டார் என்றும், பழனியம்மாளிடம் 23.10.2019 ம் தேதி நானும், சேகரும் போய் ரூ. 45,000/- யை கொடுத்துவிட்டு மீதி பணத்தை கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு குமாரின் 3 பிள்ளைகளையும் 23.10.2019 ம் தேதி புதன் கிழமை மாலை 5.00 மணிஅளவில் மீட்டுக்கொண்டு வடலாடிக்கு அழைத்து கொண்டுவந்துவிட்டார்கள் என்றும், குரும்பலூரில் இருந்து வந்ததிலிருந்து பாதிக்கப்பட்ட சிறுமிக்கு காய்ச்சல் நிற்காமல் இருப்பதாகவும், விஜயகுமாரி பாதிக்கப்பட்ட சிறுமியை விசாரித்தபோது பழனியம்மாள் வீட்டில் இருக்கும்போது பாதிக்கப்பட்ட சிறுமியிடம் சங்கர் தவறாக நடந்துக்கொண்டதாக கூறினார் என்றும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள் என்றும், சங்கர், பழனியம்மாள் மீது விஜயகுமாரி புகார் கொடுத்திருப்பதாக கேள்விப்பட்டுவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**